Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 22 7-1985 திங்கட்கிழமை (ஆடி 7 ஜுலைகஸ்தா 3, முழக்கம் 166

## இலங்கை அரசின் தூய்மை பற்றி கலைஞர் கருணாநிதி கருத்து

(திருச்சி)

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகப் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோதே இலங்கையில் தமிழர்களைக் கொலைசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வந்தது இலங்கை அரசின் இரட்டைத் தூய்மையைச் சந்தேகிக்க வைக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று திருச்சியில் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார் யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களையும் கலைஞர் விபரித்துக் கூறினார்.

★ யுத்த நிறுத்தத்தை மீறி நேற்று நள்ளிரவு நடந்தது:

# பொலிகண்டி துப்பாக்கிச் சூட்டுசம்பவம்

# ராணுவ வீரர் மரணம் இளைஞர் படுகாயம்

## மேலும் இரு ராணுவத்தினர் காயமுற்றனர் அச்சத்தால் மக்கள் இடம் பெயர்ந்தனர்

பொலிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்களை தீவிரவாத இளைஞர்கள் மறைந்து நின்று தாக்கியதால் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மேலும் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

அதேவேளையில் இச் சம்பவத்தில் படுகாயத்துக்குள்ளான இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். இவரது நிலை கவலைக்கிடமாகவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் 23 வயதான டிவ் இளைஞரின் பெயர் ஜமேட் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ வீரரை சுட்டுக் கொலைசெய்த சம்பவத்தில், இராணுவத்தினர் திருப்பிச் சுட்டபோது இரண்டு அல்லது மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. தீவிரவாதிகளிடமிருந்து அன்னியக்க துப்பாக்கி உட்பட பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த கடந்த மாதம் 18ம் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணப்

— 6ஆம் பக்கம் பார்க்க

## பூஸாவிலிருந்து நேற்று வந்த 21 யாழ். இளைஞர் விபரம்

பூஸா ராணுவ முகாமிலிருந்து விடுதலையான இருபத்தொரு இளைஞர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். அனுராதபுரத்திலிருந்து விசேஷ பஸ் மூலம் இவர்கள் கொண்டு வரப்பட்டனர்.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

(1) அப்பாப்பிள்ளை அருள்குமார், (2) செல்வன் பாலச்சந்திரன், (3) மகாலிங்கம் சந்திரகாந்தன், (4) பாலசுந்தரம் கார்த்திகேசன், (5) சிறீபதிசுந்தரம் கந்தசாமி, (6) தங்கராஜா புஸ்பராஜா, (7) நலரட்ணம் இரத்தினசாமி (8) தர்மராசா சாந்தகுமார், (9) முருகப்பிள்ளை சபநாதன் (10) சுப்பிரமணியம் யோகேந்திரன், (11) சாமிநாதன்-அந்தோனியோகநந்தன், (12) செல்லத்துரை நேசரட்ணம், (13) இராசநாயகம் பவளராஜா, (14) தம்பிப்பிள்ளை ராஜகுலநாதன், (15) சின்னத்தம்பி கிருஷ்ணராஜா, (16) சுதிவேல சிறிபாலன், (17) அந்தோனிப்பிள்ளை ஞசைப்

— 6-ஆம் பக்கம் பார்க்க

அரச பயங்கரவாதத்தால்

## பலியானவர்கள் நினைவாக 24, 25ம் திகதி ஹர்த்தால்!

அரச பயங்கரவாதத்திற்குப் பலியான விடுதலைப் போராளிகளினதும், ஈழ மக்களினதும் நினைவாக இம்மாதம் 24ம், 25ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ் ஈழ அதிரடிப்படை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அதிரடிப் படையினரால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் வீர மரணமடைந்த விடுதலைப் போராளிகளுக்கும், ஈழ மக்களுக்கும் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் இம்மாதம் 25ம், 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளது தெரிந்ததே. இதனால் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படக்கூடும்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி பேச்சு:

## பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எவராலும் எதிர்க்க முடியாது!

(சம்புறுப்பிட்டிய)

"நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் எதிர் நோக்கியிருக்கும் பயங்கரமான இன்றைய நெருக்கடி நிலைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பொறுப்பை எந்த ஒரு அரசியல் கட்சியோ, இயக்கமோ, தனி நபரோ எதிர்க்க முடியாது. இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு நாம் இன்று மேற்கொள்ளும் தீர்மானங்களே எமது நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்க இருக்கின்றன".

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சம்புறுப்பிட்டியவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்

இலங்கை வாழ் மக்கள் யாவர்க்கும் நியாயம் வழங்கும் அதேவேளையில் எமது நாட்டின் ஒற்றையாட்சி அமைப்பைப் பேணிக்காப்பது ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடனாகும். நாட்டின் வரலாற்றின் இக்கட்டான சூழ்நிலை உருவாகியிருக்கும் இன்றைய நிலையில் மக்கள் புரிந்துகொள்ளும் மனப்பான்மையுடனும் பொறுமையுடனும் நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் ஒன்றுபட்டுத் திடமான முறையில் செயற்பட்டால் மாத்திரமே பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியும். அரசாங்கம் நாட்டை விற்றுவிட்டது என்று அதன் மீது குற்றம் சுமத்துவதன் மூலம் நெருக்கடியைத் தீர்த்து வைக்க எவரும் உதவ முடியாது என்றும் அமைச்சர் சொன்னார்.

பூட்டான் பேச்சுவார்த்தை

—6ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி நேற்று தெரிவித்தார்:

## அரசசேவை பெண் ஊழியருக்கு அதிக நாட்கள் பிரசவ லீவு!

(கொழும்பு)

இலங்கையில் பெண்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தவும் அவர்களது நன்மைகளை முன்னெடுத்துச் செல்லவும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா கோட்டேயில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இவ் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட அனாதைகள் விதவைகள் ஒய்வூதியத் திட்டம் வேலை செய்யும் பெண் இறந்தபின்னர் கணவனும் பிள்ளைகளும் ஒய்வூதிய நலமைகளைப் பெற உரிமையுடையவர்களாகும்.

இலங்கை நிர்வாக சேவையில் பெண்கள் சேர்ந்துகொள்வதற்கு முட்டுக்கட்டையாக இருந்த அனுமதிப் பங்கு முறை 1980 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டது. அரச சேவையி

—6-ஆம் பக்கம் பார்க்க

## குருநகரில் தெருக்கூத்து

(குருநகர்)

நேற்று மாலை குருநகர் பகுதியில் பிரதான இடங்களில் முகமூடி அணிந்து வந்த கோஷ்டியினரால் தெருக் கூத்துப் பாணி நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

வைரவர் வேடம் போட்ட ஒருவர் நடுவில் நிற்க சுற்றியுள்ள ஏனையவர்கள் தமக்கு ஏற்பட்ட இழப்புகளைச் சொல்

-6 பக்கம் பார்க்க

## தமிழக அன்பளிப்பு நூல்கள் கண்காட்சி இன்று ஆரம்பம்

தமிழ்நாடு அரசாங்கத்தால் யாழ் பொதுஜன நூல்நிலையத்துக்கென வழங்கப்பட்ட புத்தகங்களின் கண்காட்சி இன்று முதல் நல்லூர் இந்து விடுதியில் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் காலை 9-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை சகலரும் இதனைச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதி அளிக்கப்படும்.

இன்று முதல் ஒருவார காலத்திற்கு இக்கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இடையில் இரு தினங்களுக்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் அத்தினங்களில் கண்காட்சி நடைபெறாது எனவும் அதற்குப் பதிலாக வார இறுதியில் சில தினங்கள் கண்காட்சி நீடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குஜராத்தில் 10 பேர் பலி

(புதுடில்லி)

குஜராத் மாநில அஹமதாபாத் நகரில் நேற்று இடம்பெற்ற கலவரங்களின் போது பத்துப் பேர் பலியாகியும் பதினெட்டுப் பேர் காயமடைந்தும் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டோரில் ஒன்பது பேர் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் இன்னொருவர் கலகக்காரர்களின் தாக்குதலினாலும் பலியானார்கள்.

நேற்றைய கலவரங்களின் போது பல இடங்களில் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாகவும் சுமார் நானூறு பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## தங்கம் கடத்த முயன்றவர் கைது

மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்களைக் கடத்த முயன்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்று கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

## தேங்காய் விலையில் பெரும் வீழ்ச்சி; நேற்று 80 சதம்!

தேங்காயின் விலையில் மேலும் பெரும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது. நேற்று கொழும்பு மார்க்கட்டில் தேங்காய் எண்பது சதத்துக்கும் ஒரு ரூபாவுக்குமிடையே விற்பனையானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஒரு ரூபாவுக்கும், ஒரு ரூபா இருபது சதத்துக்குமிடையே கொழும்பு மார்க்கட்டில் தேங்காய் விற்பனையானது.

யாழ்ப்பாணத்தில் நேற்று பொது மார்க்கட்டில் ஒரு ரூபா ஐம்பது சதம் வரைக்கும் தேங்காய் விற்பனையானது கொடிகாமம், எழுதுமட்டுவாள், பளை பகுதிகளில் தேங்காய் ஒக்ரேகால் ரூபா வரை விற்பனையாகின்றது.

உதவி விவசாய பணிப்பாளர் பேச்சு:

# நெருக்கடி நிலையும் அசம்பாவிதங்களும் விவசாயிகளை பெருமளவு பாதித்துள்ளன!

(சித்தன்கேணி)

இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையும் காலத்திற்குக் காலம் இடம்பெறும் அசம்பாவித சம்பவங்களும் வடபகுதி விவசாயிகளைப் பெரிதும் பாதித்துள்ளன என்பதே பொதுமக்களின் பரவலான அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயத்தை நிரூபிக்கும் வகையில் வடபகுதி விவசாயிகளின் விவசாயப் பொருட்கள் தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள விவசாயிகள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக எமது பகுதி விவசாயிகள் விவசாயம் செய்வதை நிறுத்தாது மேலும் அதிக சிரத்தை எடுத்து விவசாயத்தை விருத்தியாக்கி பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

சங்கானை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றமும் தொல்புரம் சமநலச் சேவை நிலையமும் இணைந்து சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பெற்ற இம்மாபெரும் விவசாயக் கருத்தரங்கை ஒழுங்கு செய்தனர்.

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. ரி. ஜி. ரி. சோமநாதர் உரையாற்றும் போது விவசாயச் செய்கைக்கு முதலீடு, பயிர்ப்பாதுகாப்பு ஆகிய இரண்டு விடயங்களும் மிகப் பிரதானமானவை என்றார்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. வ. யோகானந்தசிவம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இக்கருத்தரங்கில் விவசாயம் சம்பந்தமான பொருட்காட்சியும் செயல் விளக்க முறையும் இடம்பெற்றது.

சிவதர்மவள்ளவை திரு. க. கனகராசா ஜே. பீ பேசுகையில் ஓர் அங்குல நிலமும் விவசாயத்துக்குப் பயன்படுத்தப் படவேண்டும்' என்று கூறினார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சங்கானை மகா வித்தியாலய மாணவிகளது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சங்கானை நூலக வளவில் சிவதர்ம வள்ளவால் மரம் நாட்டப்பட்டது. அருட்திரு. ரூபேட் நன்றி நவின்றார்.

# தென்மராட்சி திடீர் வேட்டையின்போது கசிப்பு உற்பத்தியாளர்கள் பிடிபட்டனர்

(கண்டுக்குளி)

சிவில் தொழிலாளர் ஒன்றியம் மேற்கொண்ட திடீர் வேட்டையில் நாவற்குழி, கைதடி, சரசாலை, மீசாலை வடக்குப் பகுதியில் சட்ட விரோத விற்பனையிலும், கசிப்பு உற்பத்தியிலும் ஈடுபட்ட பலர் வசமாகச் சிக்கிக் கொண்டனர்.

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டு வரும் நஷ்டத்தைத் தவிர்க்கும் முகமாகவும், கசிப்பு உற்பத்தி ஒழிப்பை மேற்கொள்ளும் முகமாகவும் சிவில் தொழிலாளர் ஒன்றியம் இத் திடீர் வேட்டைகளை நடாத்தி வருகின்றது.

கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான கள் கண்டு பிடிக்கப்பட்டது. நாவற்குழியில் சிவில் தொழிலாளர் ஒருவரின் வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

இப் பரிசோதனையின் போது பெருமளவில் சட்டவிரோத கள் பரல்களுடன் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும் வாய்ப்பேற்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### கல்வி

ஆங்கிலம் அடிப்படையிலிருந்து பேசுவதற்கும் வேறு தேவைகளுக்கும் பாடசாலைப் பாடங்களும் வீட்டில் வந்து பத்து வகுப்புக்கு சொல்லித் தரப்படும். எஸ். விஜயானந்தன் கல்வலை, சண்டிலிப்பாய்.

### விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 8½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 4+4½; 5+3½; 5½+3. தொடர்பு விளம்பர இல: 6636 ஈழமுரசு, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

# மாணவரிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் மிக அவசியம்

(புங்குடுதீவு)

"மாணவர்களிடையே ஒழுங்கும், கட்டுப்பாடும், கல்வியில் ஆர்வமும் நிலைபெற வேண்டும். இன்றைய சூழ்நிலையில் இவைமிக அவசியம். விளையாட்டுப்போட்டிகள் மாணவர்களிடையே இச்சீரிய பண்புகளை நிலைநாட்ட உதவவேண்டும்."

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை மண்டைதீவு மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பாடசாலைகள் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், சீரிய பிரஜைகளை உருவாக்குதற்கும் தீவிர முயற்சி மேற்கொள்ளவேண்டுமென்றும் பெற்றோர்கள் இது விடயத்தில் அதிபர், ஆசிரியர்களுக்கு உறுதுணையாக விளங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிரன்நரப வித்தியாலய அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியின்போது வேலணை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொன். கணேசன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


தரமான தங்க நகைகளை

உங்கள் விருப்பம் போல்

தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்

★ நித்யா ★

கோல்ட் ஹவுஸ்

NITHYA GOLD HOUSE

303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு: தரமான பழைய நகைகளை கூடிய விலைக்கு கொள்முதல் செய்யப்படும்


## இவர்களுக்கு எதிராக நடவடிக்கை

(புங்குடுதீவு)

வேலணை அராலிச் சந்தியின் அயலில் உள்ள அரசுக்குரிய நிலத்தில் சட்டவிரோதமான முறையில் சிப்பிகள், மண் முதலியனவற்றை அகழ்ந்து எடுத்து வருவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இப்பகுதியில் தினந்தோறும் பெருமளவு மண், சிப்பி ஆகியன அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால் கடல் நீர் இப்பகுதியினுட் புகும் அபாயம் ஏற்படுமென அஞ்சப்படுகிறது. கடல் நீர் புகாது தடுக்கும் பொருட்டுப் பல லட்சம் ரூபா செலவில் அணையமைக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு சிலரின் செயலால் இப் பகுதி கடல் நீரினுள் மூழ்கும் நிலை ஏற்படலாமெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.




✳ பாஷையூர் எஸ்கவின் வசந்தா தம்பதிகளின் மகன் அன்ரனி இதயறூபன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். அபூபக்கர் வீதி மன்சூர் சித்திஜனூபா தம்பதிகளின் மகன் மொகமட் நியாத் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ புங்குடுதீவு யோகராஜா மல்லிகாதேவி தம்பதிகளின் மகள் இந்துஜா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ புளியம்பொக்கணை இராமசாமி ருக்குமணி தம்பதிகளின் மகன் செந்தில் குமரன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கரணவாய் தெற்கு கருணாநிதி பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் சஞ்சீபா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ காரைநகர், விஸ்வநாதர் மீனும்பாள் தம்பதிகளின் மகன் பரமேஸ்வரன் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கொழும்புத்துறை நவரத்தினம் புஷ்பம் தம்பதிகளின் மகள் தாட்சாயினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ அக்கராயன்குளம் சபாரஞ்சிதன் இரத்தினம் தம்பதிகளின் மகள் ரஞ்சிதஜோஜினி இன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ வட்டுக்கோட்டை பாலு இந்திரா தம்பதிகளின் மகள் ஷோபிகா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

மன்னாரில்

## துயர் துடைப்பு சங்கம் ஆரம்பம்

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் சர்வமத குருமாரின் ஆசியுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற கச்சேரி அலுவலகர் திரு. ஏ. பி. பீருரடோ இதை ஆரம்பித்து வைத்தார்.

மன்னார் அரசாங்க அதிபர் ஜனாப் அப்துல் காதர் சிறப்புரை ஆற்றினார். மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் வண. பிதா. சேவியர் குருஸ் இதன் அமைப்பு விதிகள் பற்றி உரையாற்றினார்.

இச்சங்கத்தின் தலைவராக வண. பிதா சேவியர் குருஸ், செயலாளராக திரு. சிங்கிளேயர் பீற்றர், பொருளாளராக ஜனாப் எம். எம். ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இருபத்து நான்கு பேர் கொண்ட செயற்குழு உறுப்பினரும் தெரிவானார்கள்.

கிளிநொச்சி மாவட்ட

# வீடமைப்புத் திட்டப் போட்டி பரிசு பெற்றவர்கள் விபரம்

(பரந்தன்)

பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தில், குறைந்த செலவிலான வீடுகளை அமைக்கும் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச மட்டத்திலும் கிராமோதய மட்டத்திலும் பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு:

பிரதேச மட்டம்: 1ம் பரிசு நா. காசிப்பிள்ளை பூநகரி, 2ம் பரிசு வ. செல்வநாயகம் பளை, 3ம் பரிசு நா. தர்மலட்சுமி கிளிநொச்சி.

கிராமோதய மட்டம்: பூநகரி - நா. காசிப்பிள்ளை பல்லவராயன்கட்டு, சி. சின்னத்தம்பி கொல்லகுறிச்சி, க. அருணாசலம் நல்லூர், பளை - வ. செல்வநாயகம் முகமாலை, க. புஷ்பராணி இத்தாவில், பொ. மகாதேவா புலோப்பளை, கிளிநொச்சி - நா. தர்மலட்சுமி கிளிநொச்சி.

இவர்களுக்குரிய பரிசில்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் த. பூ. முருகையாவினால் வழங்கப்படவுள்ளன.


தரமான

போட்டோஸ்ரற்

(PHOTO STAT)

தட்டச்சு எழுத்து (TYPING)

பிரதிகளுக்கு

கிளீன் கட்

(KLEEN KHUT)

239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



ஏலவிற்பனை

2 சிலிண்டர் ஜன்மார் 30. H.P. மீன்பிடி இயந்திரம் 27-7-85 சனிக்கிழமை காலை 11 மணியளவில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இயந்திரத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் வந்துபார்வையிடலாம்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,

குருநகர், யாழ்ப்பாணம்.

பல்கலைக் கழகத்துக்கு

# முரசுமோட்டையிலிருந்து மூன்று மாணவர் தெரிவு

(பரந்தன்)

திறமையினடிப்படையில் முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்திலிருந்து பல்கலைக்கழகம் செல்வதற்கு மூன்று மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

செல்வன் ஜெ. கஜேந்திரபாலன் (249) புள்ளிகள், செல்வி. மு. ராஜேஸ்வரி (248 புள்ளிகள்), செல்வி. க. கோகிலாம்பாள் (237 புள்ளிகள்) பெற்றதன் மூலம் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது.

இதேவேளை இவ் வித்தியாலயத்திலிருந்து முதன் முதலாகப் பல்கலைக்கழகம் செல்லும் பெருமையும் இவர்களுக்கேயுரியதாகும்.

# பருத்தித்துறை பாதை பஸ்சேவை குறித்து அமைச்சருக்கு பிரஜைகள் குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பஸ் டிப்போவின் சேவை குறித்துப் பருத்தித்துறைப் பிரஜைகள் குழு போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். மொஹமதுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வழமையான பஸ்சேவைகள் நடைபெறும் என வானொலிமூலம் அறிவிக்கப்பட்டு மாதம் ஒன்றாகியும் கூட முன்னையநிலையில் மாற்றத்தைக் காணமுடியவில்லையென இம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ்டிப்போவில் சேவைப் பற்றாக்குறை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 'இந்த டிப்போவில் இருந்து இம்மாவட்டத்துக்கு அப்பால் எடுத்துச்செல்லப்பட்ட பஸ்களில் பதினைந்து வரை இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை. எனவே பிரயாணிகளின் நலன் கருதி இவற்றை உடன் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுங்கள்' என இம்மகஜரில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இவ்வீதிகளில் பாவிக்கமுடியாத பஸ்கள் இருப்பின் அதற்கு மாற்றீடாக நல்ல நிலையில் உள்ள பஸ்களைத் தந்துதவுமாறும் கோரப்பட்டுள்ளது. பஸ்சேவை பற்றாக்குறையால் பிரயாணிகள் படும் அவஸ்தைகள் விரிவாக இதில் விளக்கப்பட்டுள்ளது.

## காரைநகர் மகோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் அரசடிக்காடு அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் பதினேழாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்மாதம் முப்பத்தோராம் திகதி இரதோற்சவமும், அடுத்த மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். இரண்டாம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்.

சட்டவிரோத மின்பாவனை

# தடுக்கச் சென்ற ஊழியர்கள் தாக்கப்பட்டதாகப் புகார்

(வேலணை)

சரவணை கிழக்கு முருகையா வீதியில் பலர் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதை அறிந்த வேலணை மின்சார சபையினர், அவ்விடத்தை முற்றுகையிட்டு அப்பகுதியில் உள்ள சட்டவிரோத மின் தொடர்புகளைத் துண்டிக்க முற்பட்டவேளை, அப்பகுதியிலுள்ள சில சட்டவிரோத மின் பாவனையாளர்கள் மின்சார சபை ஊழியர்களைத் தாக்கி விரட்டி விட்டார்களாம்.

தாக்கப்பட்ட மின்சாரசபை ஊழியர்கள் இதுபற்றி வேலணைப் பிராந்திய மின்முகாமி திரு. மா. விஜயசிறியிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் உடனடியாக சரவணை முருகையா வீதிக்கான மின்சாரத் தொடர்பை துண்டிக்க நேர்ந்துள்ளது.

இப்பகுதி சட்டரீதியான மின் பாவனையாளர்களும், மற்றும் பொது மக்களும் இச் சட்டவிரோத மின் பாவனையாளர்களின் செயலை தடுக்கும் பட்சத்தில் அவ்வீதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது.

வேலணைப் பிராந்திய எல்லைக்குள் சட்டவிரோத மின் பாவனையை முடிவுக்குக் கொண்டுவந்தால்தான் தொடர்ந்தும் இப்பகுதிக்கான மின்சாரத்தைச் சீரான முறையில் வழங்க முடியுமெனவும் இல்லையேல் மின்சார விநியோகம் தடைப்படலாமெனவும் மின்முகாமி திரு. விஜயசிறி தெரிவித்துள்ளார்.

# நயினாதீவு போக்குவரத்து: விதிகள் இன்னமும் தளரவில்லை

(வேலணை)

அரசினால் போக்குவரத்து விதிகள் தளர்த்தப்பட்டுள்ள இவ்வேளையிலும் நயினாதீவுக்கான போக்குவரத்து விதிகள் நீக்கப்படவில்லையா வென இப் பகுதி மக்கள் குறைபட்டுக் கேட்கிறார்கள், தற்போதும் நயினாதீவு வங்களாவடி துறை முகத்திலிருந்தும், நாகபூஷணி அம்மன் தேவாலய முன்றலிலுமிருந்துதான் பிரயாணிகள் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றார்கள். நயினாதீவிலிருந்து காலை 6மணியிலிருந்து காலை 8மணிவரையுமே பிரயாணிகள்பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள் அவ்விதமே குறிகாட்டுவானிலிருந்தும் மாலை 2மணியிருந்து மாலை 4 மணிவரையுமே நயினாதீவிற்கு படகு சேவை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்படி பிரயாணம் செய்தாலும் பிரயாணிகள் படகுகள் பாதுகாப்பு மூகாமை நோக்கி சென்றே தரிப்பு துறைமுகங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. வடபகுதி போக்குவரத்து விதிகள் தளர்த்தப்பட்டுள்ள இவ்வேளையிலும் நயினாதீவிற்கு மட்டும் ஏன் இப்பாரபட்சம் என பொது மக்கள் மிகுந்த வருத்தத்துடன் அங்கலாய்க்கிறார்கள். இந் நடவடிக்கையை உடன் நீக்கி தங்களையும் சுதந்திர மனிதர்களாகப் பிரயாணம்செய்ய அனுமதிக்குமாறு இவர்கள் கேட்கின்றார்கள்.

## தென்னம்பிள்ளை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கமநலச் சேவை நிலையத்தில் நடைபெற்ற புதிய தென்னம்பிள்ளைநாற்றுமேடை ஆரம்பிக்கும் வைபவத்தில் கமநலச் சேவை உதவி ஆணையாளர், விவசாயப் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டுவிலில் திருடர் கொட்டம் மக்கள் உறங்காது வாட்டம்

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியில் திருடர்களின் தொல்லை எல்லை மீறியுள்ளது. ஒரே இரவில் ஒன்பது வீடுகளில் புகுந்த திருடர்கள் பணம், டோச்லைட், மிளகாய், சங்கிலி உட்பட பல பொருட்களைத் திருடியுள்ளனர். ஒரு வீட்டில் திருடர்களைத் துரத்திப் பிடித்தபோது திருடனின் சாரமே அகப்பட்டது. திருடன் சாரத்தை உரிந்துவிட்டு ஓட்டம் பிடித்தானாம்.

இரவோடு இரவாக ஒரு கோஷ்டி திருட்டிற்கென்றே புறப்பட்டு, பல குழுக்களாகப் பிரிந்து, பல வீடுகளுக்குச் சென்று திருட்டுகளை நடத்தி வருகின்றதாம். ஒரு வீட்டில் திருடர் புகுந்தபோது, அதைக் கண்டுவிட்ட ஒரு பெண் 'ஐயோதிருடன்' என்று குரல் எழுப்பியதும் அவள் கழுத்தில் தொங்கிய 3 முத்து பவுண் எடையுள்ள தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு அவன் ஓடிவிட்டான்.

இதேபோன்று இன்னொரு வீட்டில், வண்ணச்சேலை ஒன்றினுல்மூடிப் படுத்திருந்த பையனைப் பெண்ணென எண்ணிக் கழுத்தைத்தடவிய திருடனின் சாரத்தைப் பிடித்துக் கொண்ட பையன், 'ஐயோ திருடன்' என்று குரல் எழுப்பவே திருடன் சாரத்தை விட்டு நழுவி விட்டான்.

## இன்று

## திருமலைக் கிளை ஆசிரியர் கூட்டம்

(திருகோணமலை)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டக்கிளைக் கூட்டம் இம் மாதம் இருபத்தோராம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்க, பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்துத் தமிழர் ஆசிரியர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொதுச்செயலாளர் கோரியுள்ளார்.

இவ்வாசிரியர்களுக்கு திருகோணமலைக் கல்வித்திணைக்களத்திலோ அன்றேல் கல்வி அமைச்சிலோ தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஏதுமிருப்பின் அவைகளை இரட்டைப்பிரதிகளில் தயாரித்துப் பொதுச்செயலாளரிடம் கையளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்கு பகிரங்கமான பாராட்டு

(பரந்தன்)

"கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்துவரும் கல்விப் பணிப்பாளரை இம்மாவட்டத்தில் வாழும் பெற்றோர்கள் என்றும் மறக்கமாட்டார்கள். அவரது நிர்வாகத்தில் கிராமப்புறப் பாடசாலைகள் மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. கல்வித்துறையை வளர்ப்பதில் அவர் ஒரு போர் வீரனாகச் செயற்பட்டு வருகிறார்" என்று பாராட்டினார் கல்லூரி அதிபர் ஒருவர்.

முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றம் அளித்த மதியபோசன விருந்து வைபவம் மாணவர் மன்றத் தலைவர் ச. புண்ணியமூர்த்தி தலைமையில் 18 7, 85 இல் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் கலந்து கொண்டார். வைபவத்தின் ஆரம்பத்தில் வரவேற்புரை நிகழ்த்திய வித்தியாலய அதிபர் திரு. சி. துரைராசா பிரதம விருந்தினரை மேற்கண்டவாறு பாராட்டினார்.

இவ் வைபவத்தில் அயல் கல்லூரி மன்றங்கள் சார்பாக கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் கே. சுந்தரராஜன், அயற்கல்லூரி அதிபர்கள் சார்பாக அ. பொ. செல்லையா, கழகங்கள் சார்பாக கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக் கழகத் தலைவர் ப. வை. ஜெயபாலன், மன்றம் சார்பாக உயர்தர மாணவர் மன்றப் போஷகர் வ. யோகநாதன். கல்வி வட்டாரம் சார்பாக பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி நா. தணிகாசலம் கல்விக் காரியாலயம் சார்பாக அலுவலக வட்டாரக் கல்வி அதிகாரி மா. சண்முகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

பிரதம விருந்தினரின் ஆசியுரையை அடுத்து மன்றச் செயலாளர்செல்வன் ச. பூலோகராசா நன்றியுரை வழங்கினார்.

## மெய்வல்லுநர் போட்டி

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இம்மாதம் முப்பதாம் திகதியும் ஆகஸ்ட் முதலாம் திகதியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்திற்குப் பிரதம அதிதியாக யாழ். பிரதேச பிரதம கல்வியதிகாரி திரு. வீ. சபாநாயகம் கலந்து கொள்கிறார்.

## பொதுக்கூட்டம்

(புலோலி)

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது

## நயினாதீவு கி. அ. சங்கம் கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு தபால் நிலையத்திலிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக அகற்றப்பட்ட கம்பியில்லா வானொலித் தொலைபேசிக் கருவியை மீண்டும் பொருத்தி தீவின் ஒரேயொரு வெளித்தொடர்புச் சேவையான தொலைபேசிச் சேவையை உடனடியாக ஆரம்பிக்குமாறு வடபகுதித் தொலை தொடர்புகள் அத்தியட்சகரிடம் நயினாதீவு தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

லண்டன்
ஐ. சி. எம். ஏ.
யாழ். கிளை
பதிவுசெய்த மாணவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.
திருஞானஸ்
141, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

யசோராணி



தோற்றம்: 17-09-60
மறைவு: 22-06-85

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்புப் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.
ஊரிக்காடு, மடத்தடி
வல்வெட்டித்துறை.

### உதய சிந்தனை

கண்ணியமான மனிதன் எப்போதும் நீதியாகவே சிந்தனை செய்கின்றான்.

--ஓர் அறிஞர்

37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

22-7-1985 திங்கட்கிழமை (குரோதன ஆடி 7)

# பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை!

கடந்த சில தினங்களாக தமிழ்ப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் செய்திகளும், தமிழீழ இயக்கங்களிடமிருந்து வரும் அறிக்கைகளும் கருமேகக் கூட்டங்களை உருவாக்கி விடுமோ என்று அச்சம் தருகின்றன.

வன்னிப் பகுதியில், தமிழ்க் கிராமங்கள் மீது, ஆயுதம் தாங்கிய குடியேற்ற வாசிகள் ஆரம்பித்திருக்கும் தாக்குதல் பற்றி பல புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

டொலர், கென்ற் பண்ணைகளில் மீண்டும் குடியேற்றப் பட்டவர்கள் பாதுகாப்புக்கு வந்தவர்களின் "போதிய பாதுகாப்புடன்" தமிழ் மக்கள் வீடுகளுக்குள் புகுந்து நடத்தும் அட்டகாசம் பற்றி பல செய்திகள் கிடைத்துள்ளன.

வவுனியா மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி அவர்கள் இச்செயல்கள் பற்றி அமைச்சர் தொண்டமானுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம் பகுதியில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழர்கள் உயிருக்கு அஞ்சி பல நாட்களாக காடுகளுக்குள் ஒளிந்து வாழ்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

நெடுங்கேணியில் ஒதியமலை, பெரியகுளம், பட்டிகுடியிருப்பு போன்ற தமிழ்க் கிராமங்களில் ஆடு, மாடு, கோழி போன்றவை களவாடப்படுவதாகவும், மிளகாய், வெங்காயம், மரக்கறி வகைகள் போன்ற விளைபொருட்கள் கொள்ளையடிக்கப் படுவதாகவும் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், வன்னி, முல்லை மாவட்டங்களில் மீண்டும் குடியேற்றப்பட்டவர்களால், ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் இம்சைப்படுத்தப்படுகிறார்கள் என்று சொல்வதே பொருத்தமாகும்.

இந்த அநியாயச் செயலுக்குக் காரணம் என்ன ?

யுத்த நிறுத்தம், வன்செயல் நிறுத்தம் என்ற பெயரில் ஒப்பந்தங்களைச் சாக்கிட்டு இளைஞர்களை அமைதியாக இருக்கச் செய்துவிட்டு, எல்லைக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களைத் தாக்குவதும், அவர்கள் சொத்துக்களைச் சூறையாடுவதும் தற்செயலான சம்பவங்களாக இருக்க முடியாது.

இந்த வேளையில் சென்னையிலிருந்து விடுதலை இயக்கங்கள் விடுத்திருக்கும் அறிக்கைகளை ஆட்சியாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வன்செயல் நிறுத்தம் காணப்பட்ட காலத்தை தனக்குச் சாதகமாக்கி, யுத்தப் பிரகடனம் ஒன்றைச் செய்வதற்கு அரசாங்கம் தன்னைத் தயார் செய்து வருவதாக 'ஈரோஸ்' இயக்கம் எச்சரித்துள்ளது

கடல் கண்காணிப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளும், தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல்வேறு இராணுவ, கடற்படை முகாம்களை இணைப்பதில் செலுத்தப்பட்டுவரும் கவனமும், விடுதலை இயக்கங்களை வேரோடு சாய்க்கவும், யுத்தப் பிரகடனம் ஒன்றை வெகுவிரைவில் செய்யவும் அரசு மேற்கொண்டுவரும் தந்திரத்தைப் புரிய வைக்கின்றது என்று இவ் எச்சரிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

பூட்டான் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் காற்றில் பறந்துகொண்டிருக்கின்றன என்று "ஈழத் தேசிய விடுதலை முன்னணி" நேற்று முன் தினம் சென்னையில் அறிவித்துள்ளது

நான்கு விடுதலை இயக்கங்களின் இணைப்பான இந்த முன்னணி இலங்கை அரசின் இவ்வாறான போக்கு சந்தேகத்தையே ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட யோசனைகளையே பூட்டான் மாநாட்டில் மீண்டும் இலங்கை அரசு சமர்ப்பித்ததாகவும், இலங்கைத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இலங்கை அரசு அங்கீகரிக்காவிடின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாதெனவும் இம்முன்னணி மேலும் தெரிவித்துள்ளது.

கொடுக்கப்பட்ட காலக் கெடுவில் அரைவாசிக் காலம் முடியும் வேளை வந்துவிட்டது.

தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படும் தாக்குதல்கள் பூட்டான் மாநாட்டையும் பூஞ்சணம் பிடிக்கச் செய்துவிடக் கூடும் என அச்சம்கொள்ள வைக்கின்றன.

அரசாங்கத்தின் போக்கு வழக்கம்போல "பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை" என்ற எண்ணத்தையே மக்கள் மனதில் ஊடுருவச் செய்கின்றது.

அருமையான சந்தர்ப்பத்தை இம்முறையும் ஆட்சியாளர்கள் தவறவிட்டால், தவறியவர்களாகவே போய்விடுவர்!

---

ஈழத் தீவிரவாத இளைஞர்களுடன் படகொன்றில் இந்தியாவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை நேரில் அவதானித்து, பின்னர் அதே படகில் இந்தியா திரும்பிய "த வீக்" சஞ்சிகையின் நிருபர் பக்வன் ஆர். சிங் எழுதிய கட்டுரை இங்கு மொழி பெயர்த்துத் தரப்படுகின்றது. கடந்த "ஏப்ரல் 28-மே 4" த வீக் இதழில் இது வெளியானது.

# உயிராபத்துக்கள் நிறைந்த பயங்கர கடல் பயணம்!

நடுநிசியாகி வெகு நேரமாகிவிட்டிருந்தது. சந்திரன் உதயமாயிற்று எம்மைச் சூழ இருந்த சமுத்திர நீரின் மீது பட்ட நிலா ஒளி, வெள்ளிப் பாளங்களாகப் பளிச்சிட்டது. இந்தியக் கடற்கரை இன்னமும் வெகு தொலைவிலேயே இருந்தது.

எமது சிறிய, "ஃபைபர் கிளாஸ்" படகின் நீளம், ஏறத்தாழ இருபது அடி இருக்கும். அதனுள், நாம் எல்லோருமாக ஒன்பது பேரும் அலுத்துக் களைத்துப்போயிருந்தோம். வள்ளத்தின் தரை மீது சிலர் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தனர். அதன் "சைட் போர்ட்" எனப்படும் படகு விளிம்பின் மிதிபலகை குந்தியிருக்கும் போதுகூட, தோளளவு உயராது. அதனோடு சார்ந்தபடி இருந்தனர் சிலர். அக்கணத்திலுள் பரிபூரண விழிப்பு நிலையில் இருந்தவர்கள் மூவர் மாத்திரமே. தோணியின் உயர்வலு வாய்ந்த மூன்று மோட்டர்களையும் இயக்கி அதனைச் செலுத்திக் கொண்டு இருந்தோரே அவர்கள். கடந்த காலத்தில் மயிரிழையில் தாம் தப்பித்துக் கொண்ட தமது வீர தீரப் பிரதாபங்களைத் தத்ரூபமாக எடுத்துச் சொல்லி, எல்லோரையும் தம்மைப் போலவே உற்சாகமாக, விழிப்புடனிருக்கச் செய்வதற்கு அவர்கள் அரும்பாடுபட்டனர்.

அம்மூவரில் ஒருவர், கழுகுக் கண்களால் தொலைவிலுள்ள அடிவானத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்தபடி, படகின் முன்புறத்தில் அமர்ந்திருந்தார். மீகாமன்மார் முக்கியமானவர்கள் என்றால், இவரே அவர்களுள்ளும் பரம முக்கியஸ்தர். பகைக் கடற்படைப் படகுகள் அணுகிவருவதை முதன் முதலில் அறியத்தரும் "றேடார்" நுணுக்காடி போன்றவை, பரந்தவொரு வீச்செல்லையைச் சதா துளாவி வரும் இவரது கண்கள். இலங்கை அரசு கடற்படையின் சுற்றுக் காவற் கலங்கள், தடையாணைக்குட்பட்ட இவ்வலயத்தினுள் சஞ்சரிப்பதை, அக் கடற் பிராந்தியத்தைக் கடந்து கொண்டிருந்த நாமனைவரும், அதாவது எட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகளும், பத்திரிகையாளராகிய நானும், நன்கு அறிந்திருந்தோம்.

இந்தியப் பத்திரிகையொன்றின் சார்பில், இலங்கைத் தீவிலுள்ள நிலைமையைக் கண்கூடாகக் கண்டு விபரமறிய, நான் இப்பயணத்தை மேற்கொள்ளவேண்டியது ஆயிற்று. அம்முறை, போரினால் சிதையுண்டிருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து நாம் மீண்டுகொண்டிருந்தோம். இவ்வாறு இரவோடு இரவாகக் கடற் பிரயாணம் செய்வது 'புலிகளுக்கும்' அவர்களது சகாக்களுக்கும் நாளாந்த வழமையாகி விட்டிருந்தது.

வெறும் கண்ணுக்கு அரிதில் எட்டும் தொலைவில், சிறு கரும்புள்ளியெனத் தென்படுவன, இலங்கைக் கடற்படையின் ரோந்துக் கலங்கள். எங்கோ அந்தக் கடற் பிராந்தியத்தில், அவற்றின் நடமாட்டம் வெகு தூரத்திலில்லை என்பதைப் "புலிகள்" அறிவர். எனவே, அவர்கள் அவற்றைக் "கரியன்கள்" என அழைப்பர். கரியன்கள் நெருங்கிவருவதை இயன்றளவு "வெள்ளெனக்" கண்டுபிடிப்பது இத்தகைய பயணத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரதும் கடப்பாட்டுப் பணி ஆகும். எப்படியோ, அலுப்பும் களைப்பும் எம்மை அயரச் செய்துவிட்டன. அலைகடலைத்

### யாழ்ப்பாண யாத்திரை
### 1

தூரம் தொலைவில் அலைகம் கண்கள் அத்தனையும் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. எமக்குப் பின்னால் தென்பட்ட அந்தக் கரியன், புள்ளியை எவருமே சற்றும் கவனிக்கவில்லை.

படகின் மோட்டார் இயக்குநர்கள் சாதாரணமாக அத்திக்கைக் கவனிப்பது வழக்கம். அவர்களுடன், படகோட்டிகளை எதிரும் புதிருமாக நோக்கிய வண்ணம், எமது வள்ளத்தின் பின்புறமாக உட்கார்ந்திருக்கும் இரண்டு ஆட்களும்கூட, இக்கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பதுண்டு. அந்நால்வரில் நானும் ஒருவன். அந்த "கரியன்" எங்கள் நாலு பேரில் எவருடைய பார்வையிலும் படாமல் எம்மை நெருங்கியிருக்கவேண்டும். எவ்வாறாயினும், திடீரென துப்பாக்கிச் சூட்டொலி எமது செவிகளிற் பட்டது. அத்துடன் சேர்ந்து, துப்பாக்கிக் குண்டுகள் விர்-விர்-விர்ரென எம்மத்தியிலும், எம்மைத் தாண்டியும், பாயத் தலைப்பட்டன. சில குண்டுகள் எமது வள்ளத்திற்கு மேலாகச் செல்ல, வேறு சில அதன் பக்கத்திற் "பட் - பட் - பட்" எனப் பட்டுத் துளைத்தன. அப்போதுதான் நாங்கள் விழிப்பு நிலைக்கு உலுப்பிவிடப் பட்டோம்; உயிராபத்தின் வாயிலில் நாம் மாட்டிக் கொண்டிருப்பது எமக்குப் புலனாயிற்று.

அடுத்த சில கணங்களாகப் பூரணப் பீதியும் திகிலும் எமது சின்னஞ் சிறிய கலத்திலுட் தாண்டவமாடின. அதே சமயம், இலங்கை அரசின் படகிலிருந்து துப்பாக்கி ரவைகள் எம்மைச் சுற்றிச் சரமாரியாகப் பொழிந்து கொண்டேயிருந்தன. படகின் மோட்டர் இயக்குநர் இருவரில் ஒருவரான சசி, "முன்னே போங்கள் எல்லாரும்!" என உரக்கக் கூவினார். "முன்னுக்குப் போய்ப் பணியப் படுங்கள்!" எனப் பலத்த சத்தமிட்டு ஆணையிட்டார், சுபாஷ். எம்முடன் வந்த போராளிகளின் தலைவர் அவரே.

நான், படகின் பின்பக்கமாக வைக்கப்பட்டிருந்த பெற்

—5-ஆம் பக்கம் பார்க்க

---

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த

## கோளறு பதிகம்

(முதலாவது பாடல்)

பண்: பியந்தைக் காந்தாரம்

அடிமை

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

மூங்கில் போலும் தோள்களையுடைய உமையம்மையாரை இடப்பாகத்தில் உடையவரும், நஞ்சைப் பருகிய திருநீலகண்டத்தை உடையவரும் ஆகிய இறைவர் மிகவும் நன்மையாகிய வீணையை வருடி, குற்றமில்லாத சந்திரனையும், கங்கையையும் திருமுடியின் மீது சூடி, அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தினால், சூரியனும், சந்திரனும், செவ்வாயும், புதனும், குருவும் சுக்கிரனும், சனியும், இராகு, கேது ஆகிய பாம்புகளுடனே, திருத்தொண்டர்களுக்கு, மிகுதியாகவே குற்றமற்றனவாய் நல்லன நல்லன அவைகள் நல்லன நல்லன என்றவாறு.

மிக நல்ல வீணை — இறைவன் வீணாகானத்தினால் நாதத்தை எழுப்பி உலகத்தை தோற்றுவிப்பவன் என்பதாம்.

இம் முதலாவது பாட்டில் ஒன்பது கோள்களும் அடியார்களுக்கு நல்லனவே செய்யும் என்பது கூறப் பட்டது.

## இனியும் சகிக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி போத்தா

# தென் ஆபிரிக்காவில் நெருக்கடி நிலை பிரகடனம்

# கலவரங்களின் எதிரொலி!

(ஜொஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் நிகழ்ந்துவரும் ஓயாத கலவரங்களையடுத்து அங்கு நெருக்கடி நிலையை அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. நீண்ட காலமாக நீடித்துவரும் கலவரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையிலேயே அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஜொஹனஸ்பேக்கில் இதனை அறிவித்த ஜனாதிபதி திரு. போத்தா கலவரங்களை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் கூறினார். முப்பத்து ஆறு மாவட்டங்களில் இந்நெருக்கடி நிலை பிரகடனம் செய்யபபட்டுள்ளது,

இந்நடவடிக்கையின் மூலம் கலவரத்தில் ஈடுபடும் நபர்களோ அமைப்புகளோ கடும் தண்டனைக்கு இலக்காக நேரிடும்,

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கவும், அவசியமானோரைக் கைது செய்யவும், காலவரையின்றி அவர்களைக் காவலில் வைக்கவும் இப்புதிய நடவடிக்கை பந்தோபஸ்துப் படைகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.

தென்னாபிரிக்க அரசாங்கத்தின் ஒதுக்கல் நடைமுறை காரணமாகச் சர்வதேச ரீதியில் பலத்த கண்டனத்தைப் பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பஞ்சாப்பில் திடீர் வெள்ளம்

(பஞ்சாப்)

பஞ்சாப்பில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் இருபத்து ஏழு பேர் இறந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

வடபாரதத்தில் பலத்த மழையால் இறந்தோர் எண்ணிக்கை ஐம்பத்து இரண்டாக அதிகரித்துள்ளதாகவும் பீகாரில் நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜெனீவாவில் 'ஒபெக்' மாநாடு பிரச்சினை விரிவாக ஆராய்வு

(ஜெனீவா)

'ஒபெக்' ஸ்தாபனத்தின் மாநாடு ஒன்று ஜெனீவாவில் நடைபெறுகிறது.

ஈரானின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் திரு. அரேமியும் இம்மாநாட்டில் கலந்து கொள்கிறார் என தெஹ்ரான் அறிக்கைகள் தெரிவித்தன.

தம்மை எதிர் நோக்கும் பல்வேறு விடயங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் மேற்படி ஸ்தாபனத்தின் எண்ணெய் வளத்துறை அமைச்சர்கள் ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## உயிராபத்துக்கள்...

—4ஆம் பக்கத் தொடர்

ரோல் பீப்பாவோடு முதுகுப் புறமாகச் சாய்ந்தபடி அலைகளுக்குத் தாக்குப்பிடித்தவாறு கக் குந்தியிருந்தேன். அன்றிரவு காற்று வேகமாக வீசவே, அலைகளும் விம்மி உயர்ந்தெழுந்து எமது சிறிய தோணி மீது பலமாகத் தாக்கிக் கொண்டிருந்தன. இவை ஒருபுறமும், வள்ளத்திலுள் இருந்தோரின் கூச்சல் கூப்பாடுகள் மறுபுறமும், உயிர் குடிக்கும் துப்பாக்கி ரவைகள் இன்னொருபுறமுமாக, எம்மையெல்லாம் நிலைகுலையச் செய்ய, நான் முற்றும் செயலிழந்து கல்லாகச் சமைந்து போனேன். "முடிவு இது தான்." என எனக்குள் எண்ணிக் கொண்டேன் நான்.

வல்ல படகோட்டி எனப் பெயர்பெற்றவர், சசி. இலங்கைக் கடற்படையினருடன் ஆழ்கடலில் பலமுறை மோதல்களுக்கு ஆளாகி, தமது படகும் பயணிகளும், பெரும் பாதிப்புறாது தப்பிப் பிழைக்கச் சாமர்த்தியமாக வழி கோலிய அனுபவசாலி. "கை இருட்டி"யும் அவரது முகத்தைப் பார்த்து நோக்கிய எனக்கு, என்னிடமிருந்த அதேயளவு பயப் பிராந்தி, ஏதோ அவரிடமும் நிழலாடியதாகத் தெரிந்தது. "தோணியைக் கரைக்கு இழுத்தாலென்ன? ஆழமில்லா நீருக்குள் அந்தப் பெரும் படகு எங்களைத் தொடராது. தொடர முடியாது." என்று ஆற்றாமை தாளாது அவரைப் பார்த்து நான் உரக்கக் கத்தினேன்.

"பகைவனின் (இலங்கைக் கடற்படையின்) பெரிய படகிலிருந்து துப்பாக்கிகள் இடைவிடாது கக்கிய குண்டுகள், இருளில் பளீர் பளீரென மஞ்சள் தீப்பிழம்புகளாகப் புறப்பட்டு, எம்மை நோக்கி மழையெனப் பாய்ந்து கொண்டிருந்தன. அவை வெடிக்கும் ஓசையும், காற்றினூடாகக் கிழித்துச் செல்லும் ரவைகளின் 'ஙொய், ஙொய்' எனும் ஒலியும் சேர்ந்து பேரிரைச்சலாக எழ, நான் கூறியதில் எவ்வளவு சசிக்குப் புரிந்ததோ தெரியவில்லை. அவரும் மற்றைய படகோட்டியும், தோணியின் தரைமீது தாழப் பதுங்கிய வண்ணம், மோட்டரின் 'ஸ்பீட் திரொட்டல்' எனப்படும் விசைவு முடுக்கியையும் சுக்கானையும் எட்டிப்பிடித்தியக்கக் கைகளை நீட்டிக் கொண்டு இருந்தனர். குண்டுகள் மேனியிற் படாதவாறு, நாம் அனைவரும் அப்படகுத் தரைமீது பதுங்கியபடியே இருந்தோம்.

இருந்தாற் போல, "ஐயோ முருகா, இதோ பக்கத்தில் வந்துட்டான்டா!" என குளறினார் நாராயணன். வள்ளத்திற் பயணமானவர்களில் அவரும் ஒருவர். எமக்கு வலது கைப் பக்கமாக ஐம்பது யார் கூட இராது, அந்த இலங்கைக் கடற்படைக் கலம் எம்மை அணுகி நின்ற இடம். அவ்விருளிலும் அது பிரமாண்டமாகத் தோற்றமளித்தது. அதன் மேற்தளம் ஓரமாக, வரிசையாகப் பதுங்கி நின்ற உருவங்கள் எமது சிறிய வள்ளத்தின் மீது துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

துணுக்குற்ற என் மனம் நிரம்பிய எண்ணம் ஒன்றேயொன்றுதான்: "நான் சாகப் போகிறேன். எனது உடல் கடலுள் மூழ்கும்." கடலில் அமிழ்ந்து இறப்பது அவ்வேளை அவ்வளவு ஓர் இனிமையான அனுபவமாக எனக்குப் படவில்லை.

சசி மீண்டும் வீரிட்டு அலறினார்: "முன்னுக்குப்போங்கோ! எல்லாரும் முன்னுக்குப் போங்கோ, ஆண்டவனே!" எனக்கு அருகில் இருந்த மனோகரன் படகின் முற்பகுதிக்குப் பாய்ந்தான். நானும் பின் தொடர்ந்தேன். தலைகளும் மேனிகளும் அச்சிறிய எமது தோணியின் "சைட்போர்ட்" என வழங்கும் விளிம்பு மிதப்பலகையின் கீழ் பாதுகாப்புத் தேடி ஒதுங்கிக் கொண்டன. மனோகரனின் முனகல்' ஈனமாக என் காதில் விழுந்தது. ஒருவேளை இந்தச் சந்தடியில் அவரது தலை கடும் தரைமீது மோதுண்டுவிட்டதோ? என எனக்குள் கேட்டுக் கொண்டேன்.

(நாளை தொடரும்)

## தென் மேற்கு மண்சரிவுகள்:

## சீனாவில் பெரு வெள்ளம் 275 பேர் மாண்டனர்!

(பீக்கிங்)

தென் மேற்கு சீனாவில் உண்டான பெருவெள்ளத்தாலும், மண்சரிவுகளாலும் இருநூற்று எழுபத்து ஐந்து பேர் மரணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முப்பதாயிரம் வீடுகள் நிர்மூலமாகியுள்ளதாகவும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச் செய்கை நாசமாகியுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவித்தன.

மீட்புப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## ரஷ்யாவின் புதிய வெளியுறவு மந்திரியை அமெ. ஜனாதிபதி-ராஜாங்க மந்திரி சந்திப்பர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு ரொனால்ட் றீகனும், ராஜாங்க அமைச்சர் திரு, ஜோர்ஜ் சூல்ட்ஸும் புதிய சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. எட்டியட் செவட்நட்ஸைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இத்தகவலை வெள்ளை மாளிகை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

இச்சந்திப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா. பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தின் போது நியுயோர்க்கில் சோவியத் வெளி நாட்டமைச்சரைச் சந்திக்க முடியுமென திரு. சூல்ட்ஸ் எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சோவியத் வெளிநாட்டமைச்சராகப் பதவி வகித்த திரு. குரொமிக்கோ ஜனாதிபதியாக நியமனமானதையடுத்து புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேட விமான சேவை

(புதுடில்லி)

ஹஜ் யாத்திரை மேற்கொள்ளவுள்ள நான்காயிரத்து ஐநூறு பேருக்காக பத்து விசேட விமானங்கள் சேவையில் ஈடுபடவுள்ளதாகப் புதுடில்லி அறிக்கைகள் நேற்று தெரிவித்தன.

## நீடிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் ஜவுளி ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடித்து வருகிறது.

## பிலிப்பைன்ஸில் மேயரும் மற்றும் நால்வரும் கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவம் ஒன்றில் நகர மேயர் ஒருவரும் நான்கு மெய்க்காப்பாளரும் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

டெங்கல் நகர மேயரான குண்டலோ ரார்கபன் என்பவரே குறிப்பிட்டவராவார்.

இவ்வன்முறையில் ஆயுதம் தரித்த இருபது பேர் கொண்ட கோஷ்டி ஒன்று ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜாதிக் கலவரம்: 4 பேர் கொலை: 19 பேர் படுகாயம்!

(ஆந்திரா)

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்றில் எழுந்த ஜாதிக் கலவரத்தால் நால்வர் கொல்லப்பட்டனர். பத்தொன்பதுபேர் படுகாயமடைந்தனர்.

ஒருவர் தனது எருமைகளைக் கழுவத் தண்ணீர் தாங்கிக் கொண்டு சென்றதனையடுத்தே இந்த ஜாதிக் கலவரம் ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட நபர் அரிஜனர் கூடுதலாக வசிக்கும் பகுதிக்குச் சென்றவேளை அவரது செயலை அரிஜனர் ஆட்சேபித்ததையடுத்து இருசாரார் மத்தியிலும் கலவரம் உண்டானதாம்.

பொலிசார் விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாரத துணை ஜனாதிபதி வற்புறுத்து

## கலப்புப் பொருளாதார கொள்கை அவசியமானதே

(தஞ்சாவூர்)

"ஏழை மக்களை அதிகமாகக் கொண்ட பாரதம் போன்ற ஓர் நாட்டினை வளப்படுத்துவதற்குக் கலப்புப் பொருளாதாரக் கொள்கையே அவசியமானது" என்று பாரதத்துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தஞ்சாவூர்-வேதாரணியத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"கிராமப்புற மாணவர்கள் கம்பியூட்டர் அறிவியலைப் பெற வேண்டும்" என்றும் அவர் வற்புறுத்தினார்.

துணை ஜனாதிபதி தனது சொந்தவூரான பட்டுக்கோட்டைக்கும் விஜயம் செய்தார்.

## குஜராத் வன்முறை நீடிப்பு: மேலும் நால்வர் இறந்தனர்

(குஜராத்)

குஜராத்தில் சில நகரங்களில் நீடித்து வரும் வன்செயல்களால் அந்நகர்களில் தொடர்ந்தும் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது.

கத்திக்குத்துச் சம்பவங்களும், பொலிஸ் துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்துள்ளன.

நால்வர் இதில் கொல்லப்பட்டதாகவும் பதினைந்து பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ராஜீவுக்கு பாராட்டு

(புதுடில்லி)

தென்கொரியாவுக்கான கோதுமை ஏற்றுமதி குறித்துப் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டது.

மக்கள் மன நிறைவுக்காகப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கைகளை இந்த விஜயம் செய்துள்ள தென் கொரிய அமைச்சர் பாராட்டினார்.

## வரவேற்பு

(ஆந்திரா)

ஆந்திராவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி திரு ஜெயில்சிங்கை ஆந்திர முதலமைச்சர் திரு என். டி. ராமராவ் வரவேற்றார்.

## ராணுவச் சட்டம் வாபஸானது

(அங்காரா)

துருக்கியில் ஆறரை வருடங்களுக்குப் பின் தலைநகர் அங்காராவிலும், ஆறு மாவட்டங்களிலும் ஆராணுவச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாக நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டது.

# ஈழமுரசு

## மே. ஜேர்மனியில் வல்வை இளைஞர் தற்கொலை; அஸ்தி வரக்கூடும்!

(உடுப்பிட்டி)

அண்மையில் மேற்கு ஜேர்மனியில் மரணமான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞரான வி. விமலேந்திரன் என்பவரின் அஸ்தியை மேற்கு ஜேர்மனி தூதரகத்தின் மூலம் கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவரது மரணவிசாரணை அங்கு நடைபெற்று 'தற்கொலை' எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக இவரின் நண்பர்கள் வல்வெட்டித்துறைக்கு அறிவித்துள்ளனர். இவர் கடந்த நான்கு ஆண்டுகளுக்குமேல் அங்குள்ள மதபோதகர் ஒருவருடன் இருந்து வந்ததாகவும் அவர் இவருக்கு சில சொத்துக்களை இவரின் பெயருக்கு எழுதியதாகவும் கூறப்படுகிறது.

பிரதமர் பிரேமதாச மீண்டும் சொல்கிறார்:

# இந்தியாவில் தீவிரவாதிகள் முகாம்கள் உள்ளன

# வெளிநாட்டு ஆயுதங்களும் கூட கிடைக்கின்றன

(கொழும்பு)

"வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் பயங்கரவாத இயக்கங்கள் பெற்றுவருகின்றன. இச்சக்திகள் தமிழ்நாட்டின் உதவியைப் பெற்றிருக்கின்றன. அங்கு இராணுவப் பயிற்சி முகாம்களும் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த உண்மையை முழு நாட்டுக்கும் நான் முன்னரே தெரிவித்திருந்தேன்."

இவ்வாறு பிரதம மந்திரி ஆர் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொழும்பு மத்திக்கான ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினார்.

இலங்கைத் தீவிரவாதிகளுக்கு உதவியளிப்பதற்குப் பதிலாக இலங்கை மீது படையெடுக்குமாறு தான் இந்தியாவைக் கேட்டிருந்ததைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

நாம் இவ்வாறு தெரிவித்த பின் உலகத்தின் கவனம் இலங்கை மீது திருப்பப்பட்டது. திரு. ராஜீவ்காந்தி பிரதமராகப் பதவியேற்ற பின்னர் உண்மை நிலையை உணர்ந்துகொண்டு நட்புறவு ரீதியிலான பேச்சுவார்த்தைகளை நடத்த அவர் இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார் என்றும் பிரதம மந்திரி சொன்னார்.


ஜனாதிபதியைப் படுகொலை செய்ய நடைபெற்ற சதி முயற்சி பற்றிக் குறிப்பிட்ட பிரதமர்; ஜனநாயக வழியை விட்டு வன்முறைகள் மூலம் எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது என்று சொன்னார்.

அரசாங்கம் இந்நாட்டிற்கு ஒருபோதும் துரோகம் செய்யாது என்று அவர் பெரும்பான்மை சமூகத்தவருக்கு உறுதியளித்தார்.

## 40 கோடி டாலர் கடல் புதையல்

ஃபுளோரிடா கரைக்கு அப்பால் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கடலில் மூழ்கிய ஸ்பெயின் கப்பல் ஒன்றிலிருந்து சுமார் 40 கோடி டாலர் பெறுமதியுள்ள புதையலை அமெரிக்க நீர் மூழ்குவோர் கண்டெடுத்துள்ளனர். இப்புதையலை கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர்கள் தேடி வந்துள்ளனர். அதிலிருந்து ஏற்கனவே ஏழு கோடி டாலர் பெறுமதியான நகைகளும், வெள்ளியும் மீட்கப்பட்டுள்ளன.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோழர் து. பஞ்சலிங்கம்

(மனோ மாஸ்ரர்)

மலர்வு: 09-04-1956 உதிர்வு: 22-07-1984

தோழா,

தமிழின விடுதலைக்காக நீ நடந்த தூரங்கள்.....
வறுமையின் மடியில் தவழ்ந்த அந்த நாட்கள்.....
கண் விழித்த இரவுகள்.........

பல்கலைக் கழக அனுமதியை உதறி எறிந்தாய் — இயக்கங்களின் ஒற்றுமைக்காக தமிழக முதல்வர் கூட்டிய மகாநாட்டில் கலந்து கொண்டாய் — இப்படிப்பட்ட உயர்மட்டப் பங்களிப்புக்களை ஆற்றிய உனக்குக் கிடைத்த பரிசு உரிமை கோரப்படாத படு கொலையா?

உன் பிரிவால் துயருறும்

கொம்மந்துறை, வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்

### அரசசேவை....

—1-ம் பக்கத் தொடர்

லுள்ள பெண்களுக்கு கூடுதல் பிரசவ லீவு வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர் தனது உரையில் கூறினார்.

### குருநகர்....

— 1-ஆம் பக்கத் தொடர்

லிப் பிலாக்கணம் வைப்பதைக் கேட்டு ஷவரவர் ஆவேசம் கொண்டெழுந்து சுய ரூபத்தைக் காட்டப் போகிறேன் இனிப் பொறுக்க முடியாது. பிரதேச, மாவட்ட, மாகாண வேள்விகள் தனக்குப் போதாது சுதந்திர தமிழீழத் தாயகமொன்றே தனக்கு இடப்படும் சரியான பலியெனக் கூற ஏனையவர்களும் அதனைச் சபதமெடுப்பதாகச் சித்திரிக்கின்ற வகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் சுமார் முக்கால் மணி நேரம் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

### பொலிகண்டி....

- 1ம் பக்கத் தொடர்

பகுதியில் இடம்பெற்ற முதலாவது சம்பவம் இதுவாகும்.

சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்தே இருபகுதியினரும் மோதியதாக தெரியவந்துள்ளது. வான் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டதாக இப்பகுதி மக்கள் நேற்றுத் தெரிவித்தனர். பல இடங்களிலும் இரத்தக் கறைகள் காணப்பட்டன. இங்கு சில ஹெல்மட்டுகளும் இளைஞர்களால் கண்டெடுக்கப்பட்டனவாம்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் நேற்று ஹெலிகொப்டர் தாழப் பறந்து சுற்றியது. இப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர்.

நேற்று முன்தினமிரவு பல மணிநேரமாகச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## வேலணையில் நடந்த விபத்தில் மனைவி மரணம்; கணவர் காயம்

நேற்று வேலணையில் நடைபெற்ற வாகன விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த மனைவி மரணமானார். கணவன் காயத்துக்குள்ளானார்.

மரணமானவர் நிர்மலா நடேசன் (34) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை வறுத்தலைவிளானைச் சேர்ந்த இத்தம்பதியர் வேலணை வங்களாவடியில் மோட்டார் சைக்கிளில் வரும்போது லொறியொன்றுடன் விபத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த கணவனும், மரணமான மனைவியும் கொழும்பில் வங்கியொன்றில் கடமையாற்றுபவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஒன்றிணைந்தன

(பரந்தன்)

பரந்தனில் இயங்கி வந்த சுகாதாரவைத்தியஅதிகாரி அலுவலகம், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் ஒன்றிணைக்கப்பட்டு கிளிநொச்சி பிராந்திய சுகாதார நிலையமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையத்தின் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். சிறிஸ்கந்தராசா கடமை புரிந்து வருகிறார்.

இதே போன்று யாழ்மாவட்டத்திலும் நான்கு பிராந்திய சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி, புலோலி, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இந்நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## அகதிகளுக்கு தொழில் வசதி

(சென்னை)

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சிறு தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈ. எஸ். டானியல் குணநிதி தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம், மண்டபம் முகாம்களிலிருந்து வட ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்றுள்ள முப்பது குடும்பங்களைச் சேர்ந்த 125 அகதிகளிடையே உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

### பூஸாவிலிருந்து....

- 1ம் பக்கத் தொடர்

பிள்ளை, (18) சவரிமுத்து மகாராஜாக்கண்ணன், (19) இரசபுவனதயாபரன், (20) தங்கவேல் ஆனந்தவடிவேல், (21) பஞ்சரத்தினம் பிரேமச்சந்திரன்.

நேற்று விடுதலையான மன்னாரைச்சேர்ந்த இருவரின் விபரம் வருமாறு: அந்தோனிப்பிள்ளை தேவசகாயம், செல்வகாந்தி யோகநாதன்.

## நேரடி தொலைபேசி

(பரந்தன்)

கிளிநொச்சி பிரதம அஞ்சல் அலுவலகத்திற்கு அடுத்த மாதம் முதல் நேரடித் தொலைபேசி வசதி கிடைக்கவிருக்கிறது. அஞ்சலக அதிபர் எடுத்துக் கொண்ட விடா முயற்சியினால் இவ் வசதி ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இதன்காரணமாக இப்பகுதி மக்கள் இது வரை காலமும் தந்திகளை அனுப்புவதிலும் பெறுவதிலும் அனுபவித்து வந்த கஷ்டங்கள் நிவர்த்திக்கப்படவிருக்கின்றன.

## இன்று பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் பல வருடங்கள் அதிபராகக்கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி பா. சோமசுந்தரத்திற்குச் சேவை நலன் பாராட்டு விழாவும் புதிய அதிபர் வரவேற்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளன.

புதிய அதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை இதற்குத் தலைமை தாங்குவரர்.

கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. தங்கராஜா உட்பட மற்றும்பலரும் உரையாற்ற உள்ளனர்.

### பிரச்சினைக்கு....

- 1ம் பக்கத் தொடர்

குறித்துப்பிரஸ்தாபித்த அவர், 'இதில் கலந்து கொண்ட அரசாங்கத்தூதுக்குழு பலனளிக்கக்கூடிய யோசனைகளைத் தெரிவித்தது' என்று சொன்னார்.

'இப் பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு ஓரளவு வெற்றி என்றே சொல்ல வேண்டும்.' என்று சொன்ன அவர், 'தீவிரவாதிகள் வன்முறையைத் தொடர்ந்து மேற்கொண்டால் அரசாங்கம் அதனை முறியடிக்க வேண்டியிருக்கும்" என்றும் சொன்னார்.

"ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 22-07-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336